தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 14, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021,

1990, மார்ச் 28, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.''

தான் கருதியவற்றை நன்கு எடுத்துச்சொல்ல வல்லவனாய், சொல்லும்போதும், செயற்படும்போதும் சோர்வு இல்லாதவனாய், எதற்கும் அஞ்சாதவனாய் உள்ளவனை மாறுபாட்டால் வெல்லுவது யார்க்கும் முடியாது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. கவன ஈர்ப்பு.

(அ) தருமபுரி மாவட்டத்தில் பருத்தி விவசாயம் பாதிக்கப் பட்டுள்ளதால் நிவாரணம் அளிக்க வேண்டிய அவசியம் குறித்து.

*திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' பருத்தி சாகுபடி நோய்ப்பட்டு, பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க, அரசால் அறிவிக்கப்பட்ட மாவட்டங்களில் தர்மபுரி மாவட்டம் விடுபட்டுப் போனதால் அப்பகுதி மக்களிடம் ஏற்பட்டுள்ள நிலை குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தர்மபுரி மாவட்டத்தில் 1989-90 ஆம் ஆண்டு இதுவரை 14,480 எக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் 10,116 எக்டேர் இறவைப் பயிராகவும், 4,364 எக்டேர் மானாவாரியாகவும் சாகுபடி செய்யப்பட்டது. இந்த பருத்திப் பயிரில் தருமபுரி மாவட்டத்தில் எந்தவித பூச்சியோ அல்லது நோயோ பொருளாதார சேத நிலைக்கு அதிகமாக தாக்கவில்லை. இவ்

வாண்டு பருத்தி பிஞ்சு விடும் பருவத்தில் வறண்ட தட்பவெப்ப நிலை இருந்ததால் பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் அதிகம் தென்படவில்லை.

தர்மபுரி மாவட்டத்தில் பருத்தியில் காய்ப்புழுவின் தாக்குதல் இங்குமங்குமாக சில பகுதிகளில் காணப்பட்டாலும், தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு அதிகமாக இல்லை. பருத்தியில் காய்ப்புழுவிற்கு பொருளாதார சேத நிலை 10 சதம் ஆகும். ஆனால், தர்மபுரி மாவட்டத்தில் இக்காய்ப்புழுவின் தாக்குதல் இங்குமங்குமாக சுமார் 454 எக்டேரில மட்டுமே தோன்றி உள்ளது தாக்குதலின் சதவீதமும் 2 முதல் 4 சதமே ஆகும்.

ஆகவே, இக்காய்ப்புழுவின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு அதிகமாக இல்லாததாலும், இக்காய்ப்புழுவினால் உற்பத்தி இழப்பு ஏதும் ஏற்படாததாலும், தருமபுரி மாவட்டத்திற்கு நிவாரணம் அளிக்கப்படவில்லை.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தர்மபுரி மாவட்டம் இந்தக் காய்ப் புழு நோயினால் பெரிதும் பாதிக்கப்பட வில்லை. அங்குமிங்குமாக ஏற்பட்டாலும் வறட்சியின காரண மாக நோய் பரவவிட்டாலும் பொருளாதார ரீதியாக நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு அது பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உள்ளபடியே இது சரியானதல்ல; அதிகாரிகளுக்குத் தெரியாத உண்மையல்ல. என்றாலும் அரசுக்கு ஒரு சிக்கனமான முறையை கையாளவேண்டுமென்பது தான் அதிகாரிகளுடைய மனப்பான்மையாக இருக்கும். ஆனால் அவர்கள் தெரியாது செய்ததாக நான் கருதவில்லை. எனவே அரசு இதுவரையில இப்படிப் பாதிப்புக்கு உள்ளான விவசாயி களுக்கு, பாதிப்பை உணர்ந்து, உடனடியாக ஒரு நிவாரணம் இது வரை அளித்தது இல்லை. சென்ற அவையிலே என்னால் வைக்கப்பட்ட கவன ஈர்ப்புத்தீர்மானம் அனுமதிக்கப்பட்டு நானும தர்மபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட விளைவுகளை விளக்கிக்காட்டிப் பேசினேன். இந்தச் செய்தி அந்த மாவட்டத்தில் சேலம் பதிப்பு தினகரன் மற்றும் மாலை முரசு போன்ற பத்திரி கைகளில் எல்லாம் வெளிவந்து உள்ளபடியே சர்க்காரின் பேரில் மக்களுக்கு ஒரு வித அபிப்பிராயம் ஏற்பட்டது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்கவேண்டும். வினாவாக மட்டும்தான் கேட்க லாம், விரிவுரைக்கு இதில் வாய்ப்பு இல்லை.

திரு. எம். அண்ணாமலை : ஆகவே இந்த நிலைகளை இந்த அரசு பரிசீலனை செய்து நிவாரண உதவியை, தர்மபுரி மாவட்ட விவசாயிகளுக்கு அளிக்க முயற்சிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

1990 மார்ச் 28]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி காய்ப் புழு பாதிப்பு சம்பந்தமாக தமிழ்நாடு முழுவதும் இருந்து புகார்கள் வந்தன. அந்தப் புகார்களின் அடிப்படையில் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தும் விவரங்கள் சேகரிக்கப்பட்டன. அப்படி விவரங்கள் சேகரிக்கப்பட்டதன் அடிப்படையில்தான் மதுரை, காமராசர், சேலம், கோவை, திண்டுக்கல்-காயிதே மில்லத், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் காய்ப் புழுவினால் 50,000 ஏக்கர்கள் பெரும் பயிர்ச் சேதம் ஏற்பட்டு, அந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்ததைக் கருதி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதிகாரிகளோடும், என்னோடும் கலந்து பேசி அப்படிக் காய்ப் புழுவினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களில் பருத்தி சாகுபடிக்காக வாங்கியுள்ள குறுகிய மற்றும் நீண்டகால கடன்கள், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த ஆண்டு ஒத்திவைக்கப்படுகிறது என்றும், நில வரி, லோக்கல் செஸ், சர்சார்ஜ் மற்றும் தண்ணீர் தீர்வை அனைத்தும் பாதிக்கப்பட்ட பருத்தி விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யப்படுகிறது என்றும், பம்ப் செட் மின்சாரக் கட்டணம் இந்த ஆண்டு ஒத்திவைக்கப்பட்டு, அடுத்த ஆண்டில் மூன்று தவணைகளாக மின் கட்டணத்தைச் செலுத்தலாம் என்றும் வரும் பருத்திப் பட்டத்தில் பாதிக்கப்பட்ட, பருத்தி சாகுபடி செய்த விவசாயிகளுக்கு அரசு விதை மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் இலவசமாக ரூபாய் 56 இலட்சத்திற்கு வழங்கும் என்றும் அறிவித்தார்கள். ஆகவே தர்மபுரி மாவட்டத்திலும் அதுபோன்ற புகார்கள் ஏற்கெனவே வந்திருக்குமேயானால், அந்த நிவாரணம் அவர்களுக்கும் வழங்கப்பட வாய்ப்பாக இருந்திருக்கும்.

9-05 மணி

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் இந்த அறிக்கையின்படி பார்த்தாலும் 454 ஹெக்டேர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் பொருளாதார ரீதியான பாதிப்பு இல்லை என்று சொல்லப்படுகிறது. நான் இங்கே கூற விரும்புவது முழுவதுமாக இல்லையானாலும், உண்மையிலேயே எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்கு, அந்த விவசாயிகளுக்காவது அந்த நிவாரணம் அளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற தகவல்களின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மீண்டும் அறிக்கையைப் பெற்று அரசு பரிசீலிக்கும்.